*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# ஒலுவில் பிரதேச கவிதைகளில் வெளிப்படும் சமூக பண்பாட்டம்சங்கள்

**ஜே. வஹாப்தீன்**
கலாநிதிப்பட்ட ஆய்வாளர், மொழித்துறை,
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: wahapirai@gmail.com

**கட்டுரைச் சுருக்கம்**

*இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்பார்கள். அந்த இலக்கியங்களின் தலையானது கவிதை என்று கூறலாம். சங்ககாலம்தொட்டு இக்காலம்வரை கவிதை பல்வேறுபட்ட பாடுபொருட்களில் பாடப்பட்டே வந்திருக்கின்றன. சொற்சுவையும் பொருட் சுவையும் மிகுந்த கவிதைகளை புலவர்கள் ஒவ்வொரு காலப்பகுதியிலும் பாடிவந்திருக்கிறார்கள். சங்க காலத்தில் காதலையும் வீரத்தையும் பாடிவந்த புலவர்கள் அதன் பின்னர் அறத்தையும் வீரத்தையும் பாடத்தொடங்கினார்கள். காலமாற்றத்திற்கு ஏற்ப கவிதைகளின் உள்ளடக்கமும் வடிவமும் மாறத்தொடங்கின. நவீன கவிதையின் தோற்றத்தினால் பாரதியார் 'சொல் புதிது சுவை புதிது' என சோதிமிக நவகவிதையினை பாடத்தொடங்கினார். தனது கவிதையின் ஊடாக மக்களைப் பாடத்தொடங்கிவிட்டார். இவ்வாறு பாரதியார் தோற்றுவித்த நவீன கவிதை இன்று பல்வேறுபட்ட திசைகளில் வளர்ந்திருக்கின்றது. அந்த கவிதைகளுக்குள்ளே மக்கள் வாழ்வியல் பொதிந்திருக்கின்றது. அந்த வாழ்வியலுக்குள்ளே மக்களின் பண்பாட்டு அம்சங்கள் நிறைந்திருக்கின்றன. தமிழ்நாட்டு கவிதைகளில் மட்டுமல்ல இலங்கைக் கவிதைகளிலும் கவிஞர்கள் எழுதிய கவிதைகள் பல்வேறுபட்ட பண்பாட்டுக் கோலங்களை வெளிப்படுத்துகின்றன. ஈழத்து இலக்கியத்தின் தோற்றுவாய் எனக்கூறத்தக்க ஈழத்துப் பூதந்தேவனார் தொட்டு சமகாலத்து கவிஞர்கள் வரை தமது கவிதைகளுக்குள்ளே தான்சார்ந்த சமூகத்தின் பண்பாட்டு அம்சங்களை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அந்த வகையில் ஒலுவில் பிரதேசத்து கவிஞர்களும் தங்களுடைய கவிதைகளில் தான் சார்ந்த சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களை அழகாக வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அவ்வாறான பண்பாட்டம்சங்களை ஆய்வு செய்யுமுகமாகவே இந்த ஆய்வு நோக்கப்படுகிறது. ஒலுவிலில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல்வேறுபட்ட கவிஞர்களின் கவிதைகள் இங்கு நோக்கப்படுகின்றன. அந்த வகையில் ஒலுவிலில் வாழ்ந்து மறைந்த யூசுப் பாவலர், புதுலெப்பை புலவர், தோம்பர் பரிசாரி மொய்தின் பிச்சை புலவர், நேந்தம்மா, கிளிமா, ஈஸா லெப்பை முதலான புலவர்கள்தொட்டு மறைந்த ஒலுவில் அமுதன், சொல்லன்பன் நசிறுத்தீன், இன்றும் எழுதிக் கொண்டிருக்கின்ற கவிஞர்களான அன்புடீன் எஸ். ஜலால்தீன், ஜே. வஹாப்தீன், அசீஸ் எம். பாயிஸ், எஸ்.எம். ஐயூப், அல்பத்தா, க. சியா என கவிஞர்கள் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. இவர்களது கவிதைகளில் வெளிப்படும் ஒலுவில் பிரதேசத்து சமூக பண்பாட்டு அம்சங்களை ஆய்வு செய்வதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.*

**பிரதான சொற்கள்:** கவிதைகள், ஒலுவில் பிரதேசம், கவிஞர்கள், பண்பாட்டம்சங்கள்

## 1. அறிமுகம்

கவிவளமும் கலைவளமும்கொண்ட ஒலுவில் கிராமத்தில் வெகுசனப்புலவர்களும் வாய்மொழிப் பாடகர்களும் கவிஞர்களும் வாழ்ந்திருக்கிறார்கள்: வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் ஒலுவிலில் பாடல்கள் இயற்றிப்பாடிய கற்றறிந்த புலவர்களும் கல்லாத பாமரப்புலவர்களும் வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள். அந்தவகையில் அ.ம. ஹக்கீம் யூசுப்பு பாவலர் (மரைக்கான் பரிசாரி), தா.லெ.அகமது லெவ்வை (தோம்பர்), முகைதீன் பிச்சை (முடப்புலவர்), முகமது இஸ்மாயில் (புதுலெவ்வை), மெசினாலிம்(தையல் ஆலிம்), எம்.ஐ. கலந்தரும்மா (நேந்தம்மா), சம்மர்ஆலிம், போன்றோர் பாடல்கள்பாடி மறைந்த புலவர்களாகக் காணப்பட்டனர். யூ.எல்.செய்னம்பு (கிளிமா) என்பவர் இன்றும் வாய்மொழிமூலம் பாடல்களைப் பாடிவருகின்றார்.

மேலே குறிப்பிட்ட புலவர்களுக்குள் யூசுப்பாவலரின் பாடல்களே நூல்களாக வெளிவந்துள்ளன. ஏனையோரது பாடல்களை வாய்மொழியாகவே மக்கள் மனனமிட்டு பாடிவருகின்றனர். இவர்களது

பாடல்களில் ஒலுவில் பிரதேசத்து வாழ்வியல் அம்சங்களை காணமுடிகிறது. அரசியல், சமுக, சமய, பண்பாட்டு விடயங்கள் இவர்களது பாடல்களில் வெளிப்படுவதை அறியமுடிகிறது. இவ்வாறான தொரு புலவர் பரம்பரை ஒலுவிலில் வாய்மொழியாகப்பாடி வந்திருக்க, கற்றறிந்த கவிஞர்களின் தோற்றம் அதன் பிற்பாடு ஒலுவில் கிராமத்தின் இலக்கிய வளத்துக்கு உரம் சேர்த்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வாறு குறிப்பிடத்தக்க ஒலுவில் கவிஞர்களுக்குள் மிக முக்கியமானவரான ஆசுகவி அன்புடீன் பாலமுனையைப் பிறப்பிடமாகக்கொண்டவர். ஒலுவிலில் திருமணம் முடித்து வாழ்ந்தவர். ‘முகங்கள்’, ‘ஐந்து தூண்கள்’, ‘சாமரையில் மொழி கலந்து’, ‘தொப்புள் கொடியும் தலைப்பாகையும்’ முதலான கவிதைத் தொகுதிகளையும் ‘நெருப்பு வாசல்’ எனும் சிறுகதைத் தொகுதியையும் ஆக்கியிருக்கிறார். தபாலகத்தில் கடமையாற்றிய இக்கவிஞர் தற்போது ஓய்வு பெற்று அட்டாளைச்சேனையில் வாழ்ந்து வருகின்றார்.

மற்றுமொரு கவிஞரான ஒலுவில் அமுதன் எனும் புனைப்பெயர் கொண்ட அலாவுத்தீன் என்பவராவார். இவர் ஒலுவில் கிராமத்தில் பிறந்து அக்கரைப்பற்றில் வசித்தவராவார். ‘மனக்கோலம் *1988*’ (கவிதை), ‘மரணம் வரும் வரைக்கும் *1999*’(கவிதை), ‘கலையாத மேகங்கள்’ *1999*,’ சிறுகதை ‘நாம் ஒன்று நினைக்க’ *2000*, ‘மனங்களிலே நிறங்கள்’ *2001*, ‘கரையை தொடாத அலைகள்’ *2002* (சிறுகதை),‘கூடில்லாத குருவிகள்’ *2002* சிறுவர் கதை, ‘நூலறுந்த பட்டம்’*2003* சிறுகதை, ‘ஒலுவில்அமுதன் கவிதைகள்’ *2004* கவிதை, முதலியனவற்றையும் வெளியிட்டுள்ளார்.

ஒலுவில் ஊரின் மற்றுமொரு முக்கியமான கவிஞர்தான் எஸ். ஜலால்டீன். ‘சுடுகின்ற மலர்கள் (குறும்பா)’, ‘பூப்படைந்த பூக்கள்’ (கவிதை), ‘அந்தி பூத்த வைகறை’ (கவிதை) முதலான நூல்களை எழுதியுள்ளார். *1998*இல் தென்கிழக்கு ஐக்கிய எழுத்தாளர் ஒன்றியத்தின் தலைவராக செயற்பட்ட ஜலால்டீன் அட்டாளைச்சேனை கலாசார அதிகாரசபையின் உபதலைவராகவும் செயற்பட்டவர்.

கலைப்பிறை வஹாப்தீன் எனும் பெயரில் கவிதைகள் எழுதிவரும் வஹாப்தீன் ‘வேரில்லாப் பூச்சியங்கள்’, ‘அஸ்ரப் எனும் தீ’’ , கண்ணாடிக்குளத்துக் கவிதைகள்’ ,‘ வெயிலில் ஒரு வீரப்பழம்’, ‘முடக்கத்தான்’(கவிதைகள்), ‘வெட்டுக்கற்கள்(குறும்பா)’, ‘கலவங்கட்டிகள்’, ‘குலைமுறிசல்’ (நாவல்), ‘தோறாப்பாடு’ (நாவல்), ‘ஐந்து நாடகங்கள்’, ‘ஒலுவில் பிரதேசத்து வெகுசனப்பாடல்கள்’ (ஆய்வு) முதலியனவற்றை எழுதி வெளியிட்டுள்ளதோடு பல குறுந்திரைப்படங்களை இயக்கி நடித்து வெளியிட்டுள்ளதோடு பல மேடை நாடகங்களையும் எழுதி இயக்கி அரங்கேற்றியுமுள்ளார். ஆசிரியராக கடமையாற்றும் இவர் இலங்கை வானொலி பிறை எப்.எம் இன் அறிவிப்பாளருமாவார்.

ஒலுவிலின் மற்றுமொரு கவிஞரான அஸீஸ் எம். பாயிஸ் ‘உயிர்ச்சிறகுகள் (ஹைக்கூ)’, ‘வயலான்குருவி (நாவல்)’ முதலிய நூல்களை எழுதியுள்ளார். *2001*இலிருந்து கீறல் என்னும் இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டுவந்த பாயிஸ் பல குறுந்திரைப்படங்களை இயக்கி நடித்து வெளியிட்டுள்ளதோடு சுயதொழிலிலும் ஈடுபட்டு வருகின்றார்.

அதே போன்று சொல்லன்பன் நசீறுத்தீன் ஒலுவில் பிரதேசத்தின் முக்கியமான ஓர் எழுத்தாளராவார். பல சிறுகதைகளை பத்திரிகைகளில் பிரசுரித்து பாராட்டுப் பெற்றுள்ளார். ‘கிண்ணஞ்சொட்டு’ எனும் சிறுகதை தொகுதியை எழுதி வெளியிட்டுள்ள இவர் கவிதை, விமர்சனம் எனப் பல துறைகளில் ஈடுபட்டு வந்தவர் ‘புலால் வாசம்’ எனும் நாவலையும் எழுதி வெளியிட்டவராவார்.

தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் துறை பேராசிரியரான எஸ்.எம். ஐயூப் ‘எனக்குள் பெய்த மழையின் நிறங்கள்’ எனும் கவிதை நூலையும் பல ஆய்வு நூல்களையும் தந்துள்ளார். ஆய்வு, விமர்சனம், பட்டிமன்றம் எனப்பல துறைகளில் பயணிக்கும் ஐயூப் பல ஆய்வு மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார். பேருவளை ஜாமியா நளீமியாவில் கற்றுத் தேர்ந்தவரான இவர் சொல்லன்பனின் சகோதரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒலுவிலின் மற்றுமொரு கவிரான ஏ.எம்.முபாசித் அல்பதா ஒலுவிலின் வளர்ந்துவரும் கவிஞராவார். பேருவளை ஜாமியா நளீமியாவில் கற்றுப்பட்டம் பெற்ற முபாசித் அல்பதா ‘கட்டவிழ்ந்த காகிதங்கள்’ எனும் கவிதை நூலை தந்துள்ளார். அல்பத்தா கவிதை,கட்டுரை முதலானவற்றை தேசிய பத்திரிகைகளில் எழுதி வருபவராவார். வானொலி முகநூல் தொலைக்காட்சிகளில் கவியரங்கங்களில் பங்கெடுத்துவரும் இவர் மேடை அறிவுப்புக்களிலும் ஈடுபட்டு வருகிறார்.

இப்பிரதேசத்தின் குறிப்பிடத்தக்க பெண்ணெழுத்தாளரான க.சியா, 'வலித்திடினும் சலிக்கவில்லை' என்னும் கவிதை நூலை கொடகே வெளியீடாக தந்துள்ளார். கவிதை அறிவிப்பு எனப்பல துறைகளில் ஈடுபாடு காட்டிவரும் சியா பல கவியரங்கங்களில் பங்கு பற்றி தனது கவித்திறமையை வளர்த்து வருகிறார். ஒலுவிலை வசிப்பிடமாகக்கொண்ட சியா 'கடல்பறவைகள்' குழுமத்தின் தலைவியாகவும் செயற்பட்டுவருகின்றார்.

இவர்கள் தவிர நூல்களை வெளியிட்டவர்கள் என்ற அடிப்படையில் ஒலுவில் அல்ஹம்றா மகா வித்தியாலயத்தின் மாணவர்களான எஸ்.ஹப்ஸா 'பனித்துளிகள்' எனும் கவிதை நூலையும், ஜே.இம்சாமுல் அஹமட் 'ஆணிவேரும் அமுத நிலவும்' என்ற கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார்கள். நூல்களை வெளியிடவில்லை என்றாலும் அவ்வப்போது பத்திரிகை களிலும் முகநூலிலும் எழுதி வருகின்ற கவிஞர்களாக ஒலுவில் பிரதேசத்தில் பலர் காணப்படுகின்றனர். அந்தவகையில் ஒலுவில் ஆதிக், றிஸான் சுபைதீன்,எம்.பி.எம் பௌசான், சிபானி முகம்மட், பைசல் மதனி, பிஸ்றுல்ஹாபி,றிப்னா றுமைஸ், ஒலுவில் ஜெஸீமா, மஹ்மூதா ஏ.றகுமான், ஒலுவில் எஸ் முஸம்மில், நழீம் ஹனீபா,ஒலுவிலரகுமான், ஈசாலெவ்வை, இஸ்ட்.எம்.நிலாம், அன்வர், நவாஸ்ஸரபி , முதலானோர் கவிதைகளை எழுதி வருகின்றார்கள். ஒலுவில் பிரதேசத்தின் முக்கிய கவிஞராக வாழ்ந்து மறைந்தவர் மர்ஹூம் ஜெமீல் ஹஸன் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட ஒலுவில் பிரதேசத்துக்கவிஞர்கள் தங்களுடைய கவிதைகளில் பெரும்பாலும் இப்பிரதேசத்துக்குரிய மக்களது இஸ்லாமிய பண்பாட்டம்சங்களை வெளிப்படுத்துவதை நாம் நோக்கலாம். பெதுவாக ஒலுவில் பிரதேசம் 100 வீதம் முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பிரதேசமாகும். இப்பிரதேச மக்களுக்கே உரித்தான பண்பாட்டு கலாசார தொழில் முறைகள் காணப்படுகின்றன. மக்களின் அன்றாட வாழ்வில் அவர்களுக்கே உரித்தான வாழ்வியல் அம்சங்கள் வெளிப்படுவதை இப்பிரதேச கவிஞர்கள் தன் இலக்கியத்தில் படம்பிடித்துள்ளனர். அந்தவகையில் இப்பிரதேச மக்களுக்கே உரித்தான தனித்துவமான பண்பாட்டு அம்சங்களை இப்பிரதேசத்து கவிதைகள் மிகச்சிறப்பாக வெளிப்படுத்தி உள்ளதை காணமுடியும்.

## 2. பண்பாட்டம்சங்கள்

ஒலுவில் பிரதேச மக்களுடைய வாழ்வில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட பண்பாட்டம்சங்கள் குறிப்பிடத்தக்கன. ஓர் அந்நியமான ஆணுடன் பழகும் பண்பாடு, பசித்தோருக்கு இரங்கி உணவு வழங்கி ஆதரிக்கும் ஈகைப்பண்பாடு, வேற்று சமூகத்தாரோடு பழகும் நடைமுறைகள் பெருநாட் காலங்களில் மேற்கொள்ளும் ஆடை, உணவு முதலான வழக்காறுகள், ஏனைய உயிர்களுக்கும் இரங்குகின்ற கருணை, நாளாந்த தொழில் நிலைகளில் பேணுகின்ற நடைமுறைகள், திருமணச்சடங்குகள், சமய ரீதியான விடயங்கள் போன்றவற்றில் இப்பிரதேச மக்கள் கொண்டிருக்கின்ற தனித்துவமான நடைமுறைகளை இப்பிரதேச கவிதைகளில் வெளிப்படுவதை காணமுடியும். அதனடிப்படையில் பின்வரும் பண்பாட்டு விழுமியங்களை இப்பிரதேசத்து கவிதைகளில் நோக்கலாம்.

### *2.1 ஆண், பெண் வேறுபாடு பேணல்*

பொதுவாக இஸ்லாமியர்கள் ஆண்பெண் வேறுபாடு பேணவேண்டும் என்பது இஸலாமிய வரன்முறையாகும். ஆண்களும் பெண்களும் இரத்த உறவு அல்லாத ஒருவரை ஒருவர் எதிர்கொள்ளும்போது பார்வையைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும் என்பது இஸ்லாமிய நடைமுறையாகும்.

"தமது பார்வையை தாழ்த்திக்கொள்ளுமாறும் தமது கற்புக்களைப் பேணிக்கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்கு கூறுவீராக" (அல்குர்ஆன்-24:31)

இதனால் சிறந்த பண்பாட்டு விழுமியத்தை இஸ்லாம் உருவாக்குகிறது. பேசுவதிலும் பழகுவதிலும் தொழில் நிலைகளில் சந்திப்பதிலும் ஒரு வரன்முறையை இஸ்லாம் சொல்லிக்கொடுத்திருக்கிறது. இவற்றிலிருந்து மாறுபடுகின்றபோது அங்கே வெறுக்கத்தக்க அநாச்சாரங்களும் சமூகச் சீரழிவுகளும் ஏற்படுவ்தை இஸ்லாம் கண்டிக்கிறது.

இவ்வாறு மார்க்கம் கூறும் நடைமுறைகளைப்பேணும் தான் சார்ந்த சமூகத்தின் ஆண்,பெண் வேறுபாட்டை தெளிவாக வெளிக்கொணரும் கவிதைகளை இப்பிரதேச கவிஞர்கள் பாடத் தவறவில்லை. இஸ்லாம் கூறும் ஆண்பெண் வேறுபாடுகளைப் பேணாத ஆணோ பெண்ணோ

வாழ்க்கையில் இழிவு நிலையைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை ஆசுகவி அன்புடீனின் கவிதையில் காணமுடியும்.

பாத்தும்மாப் பெண்ணே
நடுப்பாதையிலேன் நீ விழுந்தாய்
உன் ஆத்துமா இந்த
அகிலத்தைப் பிரிந்ததுவா?

நேற்று நீ
ஏத்தனை நேயர்களைப் பெற்றிருந்தாய்
காற்று வீசும் திசைதேடிப் பறக்கின்ற
காற்றாடி போலுன்னைக் காண்பதற்கு எத்தனை பேர்?

நாற்றமெடுக்கும் நலிந்த சமுகத்தின்
ஏற்றம்பேசும் எத்தனையோ கனவான்கள்
நீவீற்றிருந்த இடம் தேடி
வெளிக்கிட்டு வந்தார்கள்.

ஆம் நீ ஒரு பிணம்
அதனால்தான் அவர் ஓடி ஒழிக்கின்றார். *(1986:17)*

ஆண் பெண் வேறுபாடு பேணாத ஒரு பெண் தன் பிழையான உறவு நிலைகளால் பலருடைய அபிமானத்தைப் பெற்றிருந்தாலும் கடைசியில் அந்தப் பெண் இழிவான நிலையை அடைகிறாள் என்பதை அன்புடீன் எடுத்துக் காட்டுகிறார். பெண் என்பவள் திரை மறைவில் இருக்கவேண்டிவள். அந்நிய ஆடவர்களின் பார்வைக்கு இரையாகாமல் வாழவேண்டியவள். அவள் அலங்காரங்களும் அழகும் கணவன் காணவேண்டிய காட்சி என்பதை இஸ்லாம் கற்றுக் கொடுக்கிறது. *(33:32,33)* அந்தப் பண்பாட்டை மீறுகின்றபொழுது இழிநிலையே வந்துசேரும் என்பதை அன்புடீனின் கவிதை சொல்லிக் கொடுக்கிறது. நீ உயிரோடு இருந்த காலத்தில் அலங்கரித்து அந்நிய ஆடவர்களை மகிழ்வித்தாய். ஆனால் நீ இப்போது நோயுற்று முதுமையடைந்து வீதியிலே விழுந்தாய்: உன்னை தேடுவார் யாருமில்லை. நீ இறந்துவிட்டாய். மானத்தை இழந்துவிட்டாய் என்றவாறு அன்புடீன் வருந்துகிறார்.

இதே போன்று பெண்களின் ஒழுக்க விழுமியங்கள் பற்றியும் அவர்கள் பிறர் கண்களுக்கு என்றும் மறைந்து வாழவேண்டிய பண்பாட்டை ஜே.வஹாப்தீனின் குறியீட்டுக் கவிதை ஒன்று இப்படி சித்திரிக்கிறது.

மரத்தில் இருந்தவாறே
இறை வரத்தில் காய்த்த மாங்கா
தரத்தில் உயர்ந்ததாக
இலை மறைவில் இருக்கிறது.

ஏப்போது பழுக்குமென்று
அணில் கூட்டம் அலைகிறது
பறவைகள் பறக்கிறது
இலைமறை காய் என்பதால்
ஊராரோ காணவில்லை.

கல்லடி பட்டதில்லை
காயங்கள் சொட்டுமில்லை
மரத்தில் இருந்தவாறே
மாங்கா பழுக்குமென்று
மதிப்புள்ள மாங்காய்க்கு
அணில் மாநாடு நடாத்தியது. *(2012:75)*

மாம்பழமாய் பெண்ணை உருவகித்து அந்தப் பெண்ணுக்கான மதிப்பை எடுத்துக்காட்டுகிறார் வஹாப்தீன். பெண்ணுக்கான சிறந்த பண்பாடு மறைந்து வாழ்வது. மறைத்து வாழ்வது எனும் இஸ்லாமியப் பண்பாட்டை கவிஞர் வஹாப்தீன் விளக்குகிறார். இலைகளுக்குள் மறைந்து வாழும் மாம்பழம் கல்லடி பட்டு காயப்படுவதில்லை. அதுபோல் இஸ்லாமியப் பண்பாட்டோடு மறைந்து

வாழும் பெண் களங்கப்படுவதில்லை என்பதை விளக்குகிறது இக்கவிதை. இலைமறைவில் இருக்கும் மாங்காய்க்கு மதிப்பு அதிகம் என்று கூறுவதனூடாக மறைந்து வாழும் பெண்களின் மகிமை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### *2.2 அன்னம் வழங்குதல்*

பசித்தோருக்கு உணவு வழங்குவதற்கு நபிகளாரின் போதனைகளும் வழிகாட்டல்களும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. மறுமை நாளில் அல்லாஹ் "ஆதாமின் மகனே! நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால் நீ எனக்கு உணவளிக்கவில்லை என்பான்.அதற்கு மனிதன் "என் இறைவா நீ அகிலத்தாரின் அதிபதியாய் இருக்க உனக்கு நான் எவ்வாறு உணவளிக்க இயலும்?" என்று கேட்பான். அதற்கு அல்லாஹ் "உனக்கு தெரியுமா? உன்னிடம் என் அடியான் ஒருவன் உண்பதற்கு உணவு கேட்டான்: ஆனால் நீ அவனுக்கு உணவளிக்கவில்லை. தெரிந்துகொள் அவனுக்கு நீ உணவளித்திருந்தால் அதை என்னிடம் நீ கண்டிருப்பாய்" என அல்லாஹ் கூறுவானென நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் (முஸ்லிம்-5021).

அயலவர்க்கு, நண்பர்களுக்கு , அநாதைகளுக்கு பசி என்று தெரிந்தால் அப்பசியைப் போக்குவதில் நபிகள் நாயகம் முன்மாதிரியாகத் திகழ்ந்திருக்கிறார்கள் (புகாரி முஸ்லிம்)) பசித்தவருக்கு அன்னம் படைத்தல் எனும் அறம் எல்லா சமயத்திலும் போதிக்கப் படுகின்றதொன்று என்றாலும் இஸ்லாமிய சமுகம் அவ்விடயத்தில் கூடுதலாக ஈடுபாடுகாட்டி வருகின்றார்கள். அதனால் ஆக்கி அன்னம் படைக்கும் நடைமுறையை ஒரு பண்பாட்டு அம்சமாகவே ஒலுவில் மக்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டனர். இதனால் பசித்தோருக்கு உணவு வழங்கல் குறிப்பாக நேர்ச்சை வைத்து சோறு ஆக்கிக்கொடுத்தல், கந்தூரி கொடுத்தல், கத்தம் ஓதுதல் (கத்தமுல் குர்ஆன்), காவற்காரனுக்கு சோறு படைத்தல் என்று பலவாறு அன்னமளிக்கும் நடைமுறையை இப்பிரதேச மக்கள் கடைப்பிடித்து வந்தனர்.

பசித்தோருக்கு உணவு வழங்குதல் இஸ்லாமிய விழுமியங்களில் ஒன்று என்பதை ஏற்றுக் கொண்டாலும் முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அல்லாஹ் அல்லாதவற்றுக்காக ஆக்கி அன்னம் படைத்தலை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. இருந்தாலும் முற்கால கிராமத்து மூதாதையர்கள் சில அன்னம் படைக்கும் நடைமுறைகளை பண்பாட்டு அம்சமாகவே கொண்டு செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. அதில் ஒன்றுதான் "காவற்காரனுக்கு சோறு படைத்தல்" என்பதாகும். அதாவது உணவைச் சமைத்து குடும்பத்தோடு கூடி ஒன்றாக உண்டுவிட்டு அதில் சொற்ப உணவை கொண்டுபோய் பேய்க்கு வைத்துவிட்டு திரும்பியும் பாராமல் வருகின்ற நடைமுறையையே அது குறிக்கும். அது பற்றிய அஸீஸ் எம் பாயிஸின் கவிதை ஒன்று.

இருள் கவ்வும் வேளையில
கொழுத்தி வச்ச திரி ஒளியில்
கொட்டிவச்ச சோத்த
குடும்பமா குந்தி
ஏல்லோரையும் தின்னச் சொல்வா
ஏச்சில் ஊறிய நாக்கில்
சுடுசோறும் சுண்டலும்
நாட்டுமுட்டப் பொரியலும்
ருசியேறும்போது
போதும் போதுமென்று
ஏலையை இழுத்துக் கொள்வா

மீதமிருக்கும் சோறோடு
மூணுதெரு தாண்டிச் சென்று
மூணு திரியையும் கொழுத்தி
முச்சந்தியில சோத்த வப்பா.
யாருக்கும்மா சோறு என்றால்
காவல் காரனுக்கு என்று
பக்குவமா சொல்லிவப்பா. *(2021:24)*

காவற்காரனுக்கு சோறு படைப்பதென்பது தமிழர் பண்பாட்டிலிருந்து ஊடுருவிய நடை முறையாக இருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் கலந்து வாழ்வது அதற்கு காரணமாக இருக்கலாம். இப்பழக்க வழக்கத்தை தற்கால முஸ்லிம் மக்கள் மூடநம்பிக்கை என

கைவிட்டிருப்பதை அறிய முடிகிறது. இஸ்லாமிய வழிபாடுகளல்லாத விடயங்களை இஸ்லாம் முற்றுமுழுதாக தடைசெய்துள்ளதால் இவ்வாறான பண்பாட்டம்சங்கள் காலத்தால் மறைந்து போனதென்பதே உண்மை. ஆனால் இல்லாத வறியவர்களுக்கு பசித்தவர்களுக்கு இஸ்லாம் வாரி வழங்குவதற்கு ஊக்குவித்துள்ளது என்று கூறமுடியும். பசியால் வாடும் ஏழைகளின் துயரை தமிழில் பல நூறு கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள். வறுமை எல்லா சமூகத்துக்கும் பொதுவானது. அதிலும் பசி யாவருக்கும் உரியதே. அந்தவகையில் ஒரு ஏழையின் வறுமை நிலையை ஜே.வஹாப்தீன் இவ்வாறு சித்திரிக்கிறார்.

வாசல் தண்ணீரில்
மல்லாந்து மிதந்து
ஒருபடகுபோல ஓடித்திரிந்து
குடிசையின் அலுமினியத் தட்டு
அலுத்துவிட்டது.

வீட்டுத் தின்னையில்
வானம் முகம் பார்க்கத் தொடங்கியதால்
சோற்றுப்பானை வெள்ளம் குடித்து
வயிறு நிரம்பிக் கிடக்கும். (2012:73)

மழைக்கால வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தின் வறுமை இக்கவிதையில் புலப்படுகிறது. பானை சோறாக்க வழியின்றி வெள்ள நீரைக் குடித்து தண்ணீரில் மிதப்பதாக பரிதாபப்படுகிறார் வஹாப்தீன். இக்கவிதையில் பசித்தவரின் பரிதாபம் கூறப்படுவதனூடாக அன்னம் படைப்பதற்கு அழைப்பு விடுக்கின்றார் கவிஞர். பசித்தோருக்கு இருப்போர்கள் தேடிச்சென்று உணவளிக்க வேண்டும் என்ற பண்பாட்டை வலியுறுத்துகின்றன இக்கவிதைகள்.

### *2.3 இனங்களிடையே உறவு பேணல்*

உலகிலுள்ள அனைத்து மனிதர்களையும் அல்லாஹ் கண்ணியப்படுத்தியள்ளதாக அல்குர்ஆன் கூறுகிறது.

“நிச்சயமாக ஆதாமின் சந்ததியினரை கண்ணியப்படுத்திவிட்டோம். கடலிலும் கரையிலும் அவர்களைச் சுமந்தோம்.” (அல்இஸ்ரா:70).

அல்குர்ஆன் மனித சமூகத்தை சமமாகவே மதிக்கின்றது. ஆதலால் மனிதனுக்கு மனிதன் ஒற்றுமையாக ஒருவருக்கு ஒருவர் மதித்து நடப்பது அவசியமாகும். ஒருவரை ஒருவர் மதித்து பிற இனங்களையும் ஆதரித்து புரிந்துணர்வுடன் வாழவேண்டும் என்பதையே இஸ்லாமும் வலியுறுத்துகிறது.

“நிச்சயமாக நாம் உங்களை ஒரே பெண்ணிலிருந்தும் ஒரே ஆணிலிருந்தும் சிருஸ்டித்தோம். பின்னர் கோத்திரங்களாகவும் குழுக்களாகவும் ஆக்கினோம்: நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக” (அல்ஹுஜ்றாத்:13)

மேலே கூறப்பட்ட அல்குர்ஆன் வசனத்தின் அடிப்படையில் இனங்களுக்கிடையில் உறவு பேணுவது வலியுறுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு இனங்களுக்கிடையில் உறவை வளர்த்துக் கொள்ள இலக்கியங்களும் வழிகாட்டத் தவறவில்லை. பாரதியார் சாதிகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டி “சாதிகள் இல்லையடி பாப்பா” என்றான். அவர்வழில் எத்தனையோ கவிஞர்கள் இன ஒற்றுமை கீதம் இசைத்துவிட்டார்கள். இங்கு இனபேதத்துக்கு தீவைக்கும் ஒரு கவிதை ரசிக்கத்தக்கது.

“அண்ணல் காந்தி எம்மதமேனும்
அவர்தான் எங்கள் தாத்தா
அன்னை தெரேஸா எம்மதமேனும்
அவர்தான் எங்கள் அன்னை
அப்துல்கலாம் எம்மதமேனும்
அவர்தான் எங்கள் வழிகாட்டி.” நா.முத்துநிலவன்

இதே வழியில் ஒலுவில் பிரசேக்கவிஞர்களும் தங்கள் கவிதைகளில் இனஉறவை வலியுறுத்திப் பாடியிருக்கிறார்கள். எனவே ஒலுவில் பிரதேசத்துக் கவிதைகளில் இன உறவு பேணும் தன்மை வெளிப்படுவதைக் காணலாம். இஸ்லாமும் பிற சமயத்தவருடன் உறவு பேணும் நிலையை

சொல்லித் தந்திருக்கிறது. இணைந்து வாழ்தலின் முக்கியத்துவத்தை கவிஞர் எஸ்.ஜலால்டீனின் கவிதை ஒன்று படம் பிடித்துக் காட்டுகின்றது.

முத்தமிழ் தேன்மொழிப் பாசையினால்
முதுமை அடைந்திட்ட நம்முறவு
இத்தரை மீதினில் இறுதிவரை
இருக்கவே இறைவனை வேண்டிடுவோம்.

இத்தோடு இஸ்லாமும் எம்மதமும்
இயம்புவதெல்லாம் ஒற்றுமைதான்
மந்தைகள்போலவே நாமிருவர்
மல்லுகள் செய்வது மடத்தனமே.

ஆலையடிவேம்பு ஆனந்தனும்
அடுத்துள்ள கருங்கொடி ஆமிதுவும்
ஓலைகள் பின்னி விளையாடி
ஓடித்திரிந்தது நினைவில்லையா?

கந்தனும் காதரும் மாடுபூட்டி
கலப்பை பிடித்திங்கு உழுததெல்லாம்
எந்தனை கலங்கிட வைக்குதடா
இன்று நடப்பதைப் பார்க்கையிலே. (2013:64)

இஸ்லாத்தில் சாதி மத வேற்றுமைகள் இல்லை. பிற சமயத்தவர்களை அன்புடன் ஆதரித்து மதிக்கச் சொல்கிறது இஸ்லாம். அதனைத்தான் கவிஞர் ஜலால்டீன் தனது கவிதையில் எடுத்துக் காட்டுகிறார். ஆனந்தனும் ஆமிதுவும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்கிறார். கந்தனும் காதரும் ஒன்றாக உழைத்து உண்ண வேண்டுகிறார். பிற மதங்களை மதிக்க வேண்டும் எனும் இஸ்லாமியப் பண்பாட்டை அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

ஆசுகவி அன்புடீன் தனது கவிதை ஒன்றில் இனங்கள் சண்டையிட்டுக் கொள்வதைச் சொல்லி வருந்துகிறார். இனங்கள் ஒற்றுமையாக சாந்தி சமாதானத்துடன் வாழவே விரும்புகிறார். இஸ்லாம் வலியுறுத்தும் ஒற்றுமை எனும் பண்பாட்டை ஆசுகவி வலியுறுத்துகிறார்.அந்த வகையில் அவரது "கைகுலுக்கு" கவிதையை பார்க்கலாம்.

பிட்டும் தேங்காய்ப் பூவுமான உறவு
ஓடும் புளியம் பழமுமாக மாறி
கீரியும் பாம்புமாகிவிட்டது
பரஸ்பரக் காற்றை
இவர்கள் சுவாசிக்கமாட்டார்களா?
ஆயுபோவன் வணக்கம்
அஸ்ஸலாமு அலைக்கும் குட்மோணிங்
ஆறுகளை தடை செய்யாதீர்கள்
காத்துக் கிடக்கிறது கடல் சங்கமமாவதற்காக.
(தொப்புள் கொடியும் தலைப்பாகையும் - அன்புடீன்)

ஒற்றுமையாக கூடி வாழ்வது இஸ்லாமியப் பண்பாடு. அதனை வலியுறுத்தும் விதமாகவே ஆறுகளைத் தடை செய்யாதீர்கள் என்கிறார் அன்புடீன். பிட்டும் தேங்காய் பூவும் சேர்ந்திருக்கும் பொழுது சுவை அதிகம். அதனால்தான் முஸ்லிம்களும் தமிழர்களும் சேர்ந்து வாழ்வதற்கு உவமானமாக இவ்வாறு கூறப்படுகிறது. இஸ்லாமிய பண்பாட்டில் இனங்களிடையே உறவு பேணுவது வலியுறுத்தப்படுகிறது.

### *2.4 பண்டிகையும் வழக்காறுகளும்*

பண்டிகை என்பது சமயத்துடனும் சமூகத்துடனும் தொடர்புபட்டதாகும். உலகில் வாழுகின்ற பல சமயத்தவர்களும் தங்களின் நம்பிக்கைகளுக்கேற்ப இப்பண்டிகைகளைக் கொண்டா டுகின்றனர். பண்டிகைகள் என்பது ஒவ்வொரு சமூகத்தின் பண்பாட்டை நினைவுபடுத்துவது. இந்தப்பண்டிகைகள் என்பது பொதுவாக குடும்ப உறவுகளைப்பேணவும் நண்பர்களை, உறவுகளை சந்திக்கவும் இனிப்புக்களை உண்டு மகிழவும் வாய்ப்பை வழங்குவது. பண்டிகை தினங்களிலே

கொண்டாட்டத்தில் ஈடுபடும் ஒவ்வொரு சமூகத்தவரும் பல்வேறுபட்ட வழக்காறுகளைக் கடைப்பிடிப்பார்கள். புத்தாடை அணிதல், பலகாரம் செய்தல், கைவிசேடம் கொடுத்தல், பெண்கள் மருதாணி போடுதல், சமய ஆராதனைகளில் ஈடுபடுதல் போன்ற வழக்காறுகளுடன் பல சமூகத்தவர்கள் கொண்டாடுவது வழக்கமாகும்.

ஒவ்வொரு சமயத்தவரும் சமூகத்தவரும் தங்களுக்குரிய பண்டிகைகளை பலவிதமான வழக்காறுகளுடன் கொண்டாடுவதுபோல ஒலுவில் பிரதேசத்து மக்களும் பண்டிகைகளை கொண்டாடி வருகின்றனர். முஸ்லிம்களுக்கு பண்டிகைகளாக அனுமதிக்கப்பட்டவைகள் நோன்புப் பெருநாளும், ஹஜ்ஜுப் பெருநாளுமாகும். இதுவே முஸ்லிம் மக்களுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட பெருநாட்களாகும். இத்தினங்களில் புத்தாடை உடுத்தல், பலகாரங்கள் உண்ணல் , கைவிசேடம் எனும் பெருநாள் காசு கொடுத்தல், மருதாணி கரங்களில் போடுதல் என்பன உற்சாகத்துடன் இடம் பெறும். இது தவிர நபி பிறந்த தினமான மீலாத்துந்நபி விழா, இறைநேசரைப் போற்றுகின்ற கொடியேற்ற விழா போன்ற பண்டிகைகளையும் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாறு பண்டிகைகளை மகிழ்சியாகக் கொண்டாடுவதற்கு ஒலுவில் பிரதேச மக்கள் பலகாரங்களை சுட்டு உண்டு மகிழ்வார்கள். பணியாரம், சோவி, முறுக்கு, அல்வா முதலான பலகாரங்கள் மிகவும் சுவையாக இருக்கும். பெருநாள் காலங்களில் இவ்வாறான பலகாரங்கள் இச்சமுகத்தின் பண்பாட்டு அம்சமாகவே பார்க்கப்படுகிறது. இது பற்றி ஆசுகவி அன்புடீன் எழுதிய வாழ்வியலைப் பாடுவோம் எனும் கவிதை இந்தப் பலகாரங்கள் பற்றி இவ்வாறு பேசுகிறது.

சோகி, முறுக்கு, சீனிமா இப்படியாய்
தின்பண்டங்கள செய்து தின்றவர்கள் பரம்பரை நாம்
பாற்புக்கை, நிய்யத்துப் புக்கை, பச்சைப்புடி. கொழுக்கட்டை
பணிகாரம், பலகாரம், உதிர்கழிகள்,உண்டவர் நாம்
பாலைத் தயிராக்கி தயிராலே நெய் செய்து
நெய்யை உருக்கி சுடுசோற்றில் கலந்தவர் நாம்
இளநீரும் நுங்குமதான் எம்மவரின் குடிபானம்
இவைமாறி சோடாவாய் இருக்கிறது நம்பானம்.
(தொப்புள் கொடியும் தலைப்பாகையும் - அன்புடீன்)

இவ்வாறு பலகாரங்களின் மகிமைகளை ஆசுகவி எடுத்துக்கூறும் பாங்கு அழகானது. அதேபோல் ஆடைக்கலாசாரத்தையும் அழகாக பாடியுள்ளார். அந்த கவிதையை நோக்குவோம்.

சந்திரப்படி சாரனில் சஞ்சரித்தார் வாப்பாமார்
மோகினிப்பட்டு, அருமண மூட்டு, குட்டான் பட்டு இத்தியாதி
சாறன் வகை உடுத்து சரிசமமாய் வாழ்ந்தவர் நாம்
பால் சோமன் பட்டுச்சோமன், கடுகுவண்ணச்சோமன்
பச்சவடச்சீலை, கருக்குப்பனி,மருதமூட்டு
ஆளுக்குத் தகுந்தபடி, ஆடைகொண்டார் தாய்மார்கள்
காரிக்கன் சீலை, காக்கி சீலை, சீத்தை வகையினால்
சிறுவால்கள் அணிந்து சிறப்பானார் தந்தைமார்.
(தொப்புள் கொடியும் தலைப்பாகையும் - அன்புடீன்)

ஆடை அணிகளை உடுத்துப் பெருநாளைக் கொண்டாடகின்ற பெண்கள் தங்கள் கரங்களில் மருதாணி வைத்து அலங்கரிப்பார்கள். அவ்வாறனதொரு காட்சியை சொல்லன்பன் நசிறுத்தீன் சித்தரிக்கின்றார்.

“மருதவெண்டி போட்டுக்கிட்டு
மால நேரம் காத்துக்கிட்டு
பணியாரத்தோட வந்தன்
ஊரு பாத்துடாம காத்துக்கங்க”
*(கீறல்-8)*

இவ்வாறு ஒலுவில் பிரதேசத்துக் கவிதைகளில் முஸ்லிம் மக்களது பெருநாள், ஆடைக் கலாசாரம், அலங்கார விழுமியங்கள், உணவுப் பண்பாடுகளை அறிந்து கொள்ள முடியும். பண்டிகைக் காலங்களில் இப்பிரதேச மக்கள் தங்களுக்கேயுரிய வழக்காறுகளை பேணிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

### *2.5 உயிர்களுக்கு இரங்குதல்*

அன்பினால் சாதிக்க முடியாதது உலகில் எதுவுமில்லை. உலகிலுள்ள எல்லா மதங்ளும் அன்புவழி நின்றே மனிதர்களை ஆற்றுப்படுத்துகின்றன. கொல்லுவது பாவம் என்று எல்லா மதங்களும் தடுத்துள்ளது. ஏந்த ஒரு மார்க்கமும் ஒரு உயிரை துன்புறுத்தவோ வதை செய்யவோ அனுமதிக்கவில்லை. இஸ்லாமும் உயிர்கள்மீது கருணைகாட்டவே போதிக்கிறது. அனைத்து உயிர்களையும் படைத்தவன் அல்லாஹ். அவன் எல்லோருக்கும் பொதுவானவன். அவன் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன் என குர்ஆன கூறுகின்றது.*(1:3)*

“படைப்பினங்கள் மீது கருணை காட்டாதவர் படைத்தவனால் கருணை காட்டப்படமாட்டார்” (நூல்-புகாரி)

இவ்வாறு இஸ்லாம் போதிக்கும் ஜீவ காருண்யத்தை பிரதிபலிக்கும் கவிதைகள் ஒலுவில் பிரதேசத்தில் எழுந்துள்ளன. உண்ணுவதற்கு ஆகுமாக்கப்பட்ட விலங்குகளை முறையாக அறுத்து உண்ணுவதற்கு அனுமதியளித்த இஸ்லாம், வீணாக ஓர் உயிரைக் கொல்வதை அங்கீகரிக்கவில்லை. ஒலுவில் பிரதேசத்தில் ஒரு பெருநாள் தினத்தில் வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த பொடியன்களால் ஒரு சிறிய அணில் குஞ்சு விபத்துக்குள்ளான பரிதாபத்தைக் கூறி வருந்துகிறார் கவிஞர் ஜே.வஹாப்தீன்.

என்ன அவசரம் அணிலே
எங்கு போக வந்தாயோ?

உந்தனது காலைக்குள்
இல்லாத எதனை நீ
பக்கத்துக் காட்டுக்குள்
பறந்தோடிப் பொறுக்கப்போனாய்?

தீராத பேராசை
உந்தன் விபத்துக்குக் காரணமோ?
உருவம் சிறுசு என்றாலும்
உன் உசிரு பெரிசுதானே
சின்ன அணிலே. *(2019: 72-73)*

‘புள்ளியளவில் ஒரு பூச்சி’ எனும் கவிதையிலே மகாகவி து.உருத்திர மூர்த்தி ஒரு சிறு பூச்சி தன் கைபட்டு உயிர் நீத்ததற்கு வருந்துவதைப்போல சின்ன ஒரு அணிலின் மரணத்துக்காக வருந்தும் வஹாப்தீனின் இரக்கம் உயிர்களை நேசிக்கின்ற பண்பாட்டையே காட்டுகிறது.

### *2.6 தொழில் நிலை வாழ்வியல் பண்பாடுகள்*

ஒலுவில் பிரதேச மக்களுடைய வாழ்வியலில் பல்வேறுபட்ட தொழில் துறைகள் காணப்படுகின்றன.. அவற்றில் மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன முக்கியமானவை. முஸ்லிம்கள் தங்களுடைய வாழ்வாதாரத்தை ஹலாலான (ஆகுமான) வழிகளிலேயே சம்பாதிப்பது அவர்ளுடைய பண்பாடு என்பதிலும் பார்க்க, அது அவர்களுடைய மார்க்கம் என்றே கூறலாம். அந்த வகையில் ஒலுவில் பிரதேசத் தொழிற்பண்பாடு பல கவிதைகளில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. ஒலுவில் எஸ்.ஜலாலடீன் கவிதை ஒன்றில் ஆற்றில் மீன்பிடிக்கும் பண்பாட்டை விளக்குகிறார்.

கடல்போல விரிந்த நதி ஓடிச்செல்ல
கரையிரண்டும் சிறுவரெல்லாம் கூடி நின்று
படகோட்டி மீன் பிடித்த பழங் கதைகள்
பாடுதற்கு மரபிலென்றால் பாலும் தேனும்.

கைமீனும் கணையானும் நாட்டியமாட
கருங்கெழுத்தி சுங்கான்கள் பாட்டுப்பாட
கொய் மீனோ தூண்டிலிலே மாட்டியே ஓட
கொண்டாடி சிறுவரெல்லாம் குதூகலமானார். *(2013:58-59)*

இதே போல் வஹாப்தீனின் கவிதையில் ஒலுவில் கிராமத்து முஸ்லிம் மக்களது விவசாயத்தை அண்டிய வாழ்வியல் அம்சங்கள் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன.

பூவல் வெட்டி
புதுத் தண்ணீர் ஊறும்போது
ஆவல் கொண்டு
அள்ளிக் குடித்த பூமி
அந்நியமாகிக் கிடக்கிறது.

புல்லறுத்து மாடு வளர்த்த
பூர்வீகம் அந்நியாகி
நெல்லறுத்த பூமியது
நெஞ்சுக்குள் கனவாகி
சள்ளெடுக்க இயலாமல்
தலைவர்கள் ஊமையாகி

ஆடுகளும் கோழிகளும்
ஆதிகமாக வளர்த்து
மாடுகளை மேய்த்து
மண்ணிலே பயிர் செய்து. *(2012:24-25*

ஒலுவில் பிரதேச மக்கள் விவசாயத்தை பிரதான தொழிலாகச் செய்து வாழ்பவர்கள். அதற்காக விளாங்காடு, ஆலிம்சேனை, பொன்னன்வெளி, மறுக்குளம் எனப் பல விவசாய நிலங்களிலே வாழ்ந்து வந்தவர்கள். அவர்களின் தொழிற் பிரதேசங்களில் தண்ணீரைப் பெறுவதற்காக சிறு குழி வெட்டி (பூவல்) நீர் எடுத்துப் பயன்படுத்துவதை வஹாப்தீனின் கவிதை சித்தரிக்கின்றது. அதுமட்டுமல்ல ஆடு, மாடு, கோழிகளை வளர்ப்பதும் அவைகளுக்கு உணவாக புல்லறுத்துப் போடுவதும் அவர்களின் தொழில்நிலைப் பண்பாடுகளாகவே காணப்படுகின்றன.

இதேபோல் எஸ்.எம். ஐயூப் எழுதிய கவிதை ஒன்று

"பனை ஓலைப் பாய்கள்
படுப்பதற்கு மட்டுமன்றி
விருந்தினருக்கான கம்பளமாகவும் போடப்பட்டன.

பனை ஓலைக் கைப்பெட்டிகள்
தூய நெல்லைப் பதரிலிருந்து
வேறாக்கப் பாவிக்கப்பட்டன.

ஆப்பம் சுடும் பெண்களுக்கு
பனங்கொட்டைகளே சிறந்த கேஸ் அடுப்ப" *(2012:24-25)*

எஸ்.எம். ஐயூப் எழுதிய இக்கவிதையிலே ஒலுவில் பிரதேசத்து பெண்கள் செய்து வந்த கைத்தொழில்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கருக்கு மட்டை எனும் அவரது கவிதை பெண்கள் பனை ஓலையால் பாய் இழைப்பதையும், தட்டு பெட்டி பின்னுவதையும் அழகாக சித்தரிக்கின்றன. அது மட்டுமல்ல இப்பிரதேச ஏழைப் பெண்களின் வாழ்வாதாரத் தொழிலான அப்பம் சுடுதலையும் தனது கவிதை ஊடே காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

## 3. முடிவுரை

'ஒலுவில் பிரதேச கவிதைகளில் வெளிப்படும் இஸ்லாமிய பண்பாட்டம்சங்கள்.' எனும் தலைப்பில் இவ்வாய்வு நோக்கப்பட்டுள்ளது. கவிதை இலக்கியம் குறித்த இஸ்லாமிய பார்வை, பண்பாடு பற்றிய விரிவான விளக்கங்கள், குர்ஆன் ஹதீஸ்களின் ஆதாரங்களுடன் விளக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒலுவில் பிரதேச கவிஞர்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களின் கவிதைகளில் காணப்படும் சமூக பண்பாட்டம்சங்கள் பின்வரும் தலைப்புக்களில் எடுத்துக்கட்டப்பட்டுள்ளன.

அதாவது ஆண்,பெண் வேறுபாடு பேணல் எவ்வாறு இடம்பெறவேண்டும் என்பதை இப்பிரதேசக் கவிஞர்கள் தங்களுக்குரிய கவிதைகளில் முன்னிறுத்தியிருப்பது விளக்கப்பட்டுள்ளது. அதுபோலவே இப்பிரதேச மக்கள் எவ்வாறு அன்னம் வழங்கி ஆதரிப்பார்கள் என்பதையும் அவர்களது கவிதைகள் எவ்வாறு பேசுகின்றன என்பதும் முன்வைக்கப்பட்டுள்ளது. அதுபோலவே இனங்களை எவ்வாறு ஆதரிக்கவேண்டும்? எவ்வாறு உறவு கொள்ள வேண்டும் என்றும்

கவிதைகளினூடாக விளக்கப்பட் டுள்ளது. மற்றமொரு பண்பாட்டு அம்சமான பண்டிகைக் கொண்டாட்டங்களும் அதற்கான வழக்காறுகளும் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை கவிதைகள் மூலம் விளக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பிரதேச கவிதைகள் உயிர்களுக்கு இரங்கும் விதத்தை எவ்வாறு பேசுகின்றன என்பதும் விரிவாகப் பார்க்கப்பட்டுள்ளன. இறுதியாக இப்பிரதேச மக்களின் தொழில் நிலை எவ்வாறெல்லாம் காணப்படுகின்றன என்பவும் கவிதைகள் ஊடாக நோக்கப்பட்டன.

ஒலுவில் பிரதேசம் நூறுவீதம் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசம். அப்பிரதேசத்தில் வாழுகின்ற கவிஞர்கள் அனைவரும் இஸ்லாமியர்கள். அங்கு வாழ்கின்ற மக்களோடு இரண்டறக் கலந்து வாழுகின்ற கவிஞர்கள். அம்மக்களின் பண்பாட்டுக் கோலங்களை அறிந்து அனுபவித்தவர்கள். எனவே தங்களின் கவிதைகளில் ஒலுவில் பிரதேசத்து பண்பாட்டு அம்சங்கள் பின்னிப் பிணைந்திருப்பதைக் காணமுடியும்.

**உசாத்துணைகள்**

அல்குர்ஆன்.

ஹதீஸ், முஸ்லிம். புகாரி.

அன்புடீன், (2016). *தொப்புள் கொடியும் தலைப்பாகையும்.* கவிதாலயம்: அட்டாளைச்சேனை.

அன்புடீன், (2002). சாமரையில் மொழி கலந்து. பாலம் கலை, இலக்கிய பேரவை: அக்கரைப்பற்று.

அன்புடீன், (1988). முகங்கள். அகில இலங்கை முஸ்லிம்லீக் வாலிப முன்னணி: அக்கரைப்பற்று.

அப்துல் காதிர்லெப்பை, (1967). செய்னம்பு நாச்சியார் மான்மியம்: மணிக்குரல் பதிப்பகம்.

அஸீஸ் எம். பாயிஸ், (2021). வேர்களின் கீழ் நதியிருந்தும்: கையெழுத்துப் பிரதி.

அஸீஸ். எம் பாயிஸ், (2021). கீறல், மின்னல் வெளியீட்டகம்: ஒலுவில்.

அஸ்ரப், அ.ப.மு. (2011). ஈழத்து நவீன கவிதை முன்னோடிகள் - மகாகவியும் நீலாவணனும்: நேகா பப்ளிகேசன்,

ஜலால்டீன், எஸ். (2013). பூப்படைந்த பூக்கள். செய்னம்பு ஹுசைமா வெளியீட்டகம்: ஒலுவில்.

ஜலால்டீன், எஸ். (2019). அந்தி பூத்த வைகறை. செய்னம்பு ஹுசைமா வெளியீட்டகம்: ஒலுவில்.

ஐயூப், எஸ்.எம். (2012). எனக்குள் பெய்த மழையின்நிறங்கள். மின்னல் வெளியீட்டகம்: ஒலுவில்.

ஒலுவில் அமுதன், (2004). ஒலுவில் அமுதன் கவிதைகள். றக்ஸானா வெளியீட்டகம்.

சோலைக்கிளி, (2011). அவணம். அடையாளம்: இந்தியா,

உருத்திர முர்த்தி, து. (1973). வீடும் வெளியும். வாசகர் சங்கம்: இந்தியா.

பாரதியார், (1977). பாரதியார் கவிதைகள். வானவில் பிரசுரம்: சென்னை.

வஹாப்தீன், ஜே. (2012). கண்ணாடிக் குளத்து கவிதை. ஸம்ஸ் வெளியீட்டகம்: ஒலுவில்.

வஹாப்தீன், ஜே. (2019). வெயிலில் ஒரு வீரப்பழம். ஸம்ஸ் வெளியீட்டகம்: ஒலுவில்.

வஹாப்தீன், ஜே. (2021). ஒலுவில் பிரதேசத்து வெகுசனப்பாடல்கள். கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம்: திருகோணமலை.